ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,670 — 1959 පෙබරවාරි 20 වැනි සිකුරාදා — 20.2.1959**

11,670 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## பதவி வெற்றிடம்

**பதிவு செய்யப்பட்ட கமத்தொழில் இளைஞர் கழகங்களது உரிமையுடைய அங்கத்தவருக்கு கொழும்புத் திட்டத்தின் கீழ் ஜப்பானில் வழங்கப்படும் பயிற்சி சஞ்சார திட்டம்**

பதிவு செய்யப்பட்ட கமத்தொழில் இளைஞர் கழகங்களின் ஆண் அங்கத்தவரிடமிருந்து, ஜப்பானில், விசேட்மாக கீழ்க்கண்டவற்றில், பயிற்சி பெறுவதற்கான மனுக்கள் அழைக்கப்படுகின்றன.

(அ) ஜப்பானிய கமத்தொழில் நுட்பங்களை கற்று, பயிற்சிபெறுதல் ;

(ஆ) கமத்தொழிலுக்கு உதவக்கூடிய இயந்திர சாதன உதவிகளைப்பற்றி கற்றறிதல் ;

(இ) ஜப்பானிலுள்ள கமத்தொழில் இளைஞர் கூட்டுறவு இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல் ;

பயிற்சிக் காலம் சுமார் 6 முதல் 8 மாதங்கள் வரை நீடிக்கும்.

2. இதற்காய தகுதி நிபந்தனைகள் கீழ்க்கண்டனவாகும்.

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். (அதாவது— வம்சாவழி அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்).

(ஆ) 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) கடந்த மூன்றுண்டுகளாக கமத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டவராக இருப்பதுடன் கடந்தாண்டின் தொழில் முயற்சி சம்பந்தமாக உறுதிப் படுத்தப்பட்ட சான்றிதழ்களை சமர்ப்பிக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

3. தெரியப்படும் ஒவ்வொரு அபேட்சகரும்.—

(அ) அரசினரால் நியமிக்கப்படும் ஒரு சபையினது வைத்தியப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் ;

(ஆ) பயிற்சி பெறச் செல்லும் துறையினை திருப்திகரமாக பூர்த்தி செய்வதாக உறுதியளிக்கும் ஒரு ஒப்பந்தத்தினை ஆட்சியாளருடன் செய்து கொள்ளுதல் வேண்டும்.

(இ) பயிற்சிபெறும் பாடத்திட்டத்தின் பூர்ண கட்டணத்திற்கும் பொறுப்பாக தனிப்பட்ட முறையில் ஒரு சுய உறுதி முறிச் சீட்டை எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

(ஈ) பேராதனையில் ஒரு மாதகாலத்திற்கு ஒரு பயிற்சி வகுப்புக்கு சமூகமளித்தல் வேண்டும். பயிற்சிக்காலத்தில் தினசரி படிச் செலவாக ரூபா 2.50 வீதம் அபேட்சகர்களுக்கு வழங்கப்படுவதுடன் வீடுகளிலிருந்து பேராதனைக்கும் மீண்டும் பேராதனையிலிருந்து வீடுகளுக்கும் அபேட்சகர் செல்வதற்கு ஒரு முறைக்கு மட்டும் புகைவண்டியின் மூன்றும் வகுப்புக் கட்டணம் அல்லது பஸ் வண்டிக் கட்டணமும் வழங்கப்படும்.

(உ) " பாஸ்போட் " எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

5. இந்த விசேட பயிற்சி வழங்கப்படுவதற்கு.—

(அ) ஜப்பானிய அரசாங்கத்தால் எடுத்துக் கூறப்பட்ட திட்டப்படி மாதாந்த நிர்வாக மான்யம் அளித்தல் ;

(ஆ) ஜப்பானுக்கு செல்லவும் ஜப்பானிலிருந்து திரும்பவும் பிரயாணச் செலவுகள் அளித்தல் ;

(இ) பிரயாணத்தின்போது எற்படும் இடைச் செல்வுகள் அளித்தல் ;

ஆதியனவும் அளிக்கப்படும்.

6. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரங்களில் பூர்த்தி செய்யப்படும் மனுக்கள் 28.2.59 ல் அல்லது அதற்கு முன்பதாக, கமத்தொழில் விரிவு கோட்ட உத்தியோகத்தருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

7. மனுச் செய்பவர் ஒருவர் 21 வயதிற்குட்பட்டவராக இருப்பின், அவர் தெரிவு செய்யப்பட்டால், இந்த பயிற்சி சஞ்சாரத்திட்டத்தின்படி ஜப்பானுக்குச் செல்வதற்கு மனுதாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஒரு கடிதம் அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து பெற்று தமது மனுவுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

8. இவ்வறிக்கைக்கு இணைய ஒவ்வொரு துறையினும் ஒவ்வாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

எம். எவ். சந்திரரத்ன,
கமத்தொழில் அதிபதி.

பேராதனை,
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 16 ந் உ.

**மனுப்பத்திரம்**

**பதியப்பட்ட கமத்தொழில் இளைஞர் கழகங்களது உரிமையுடைய அங்கத்தவருக்கு ஜப்பானில் வழங்கப்படும் பயிற்சி சஞ்சார திட்டம்**

கோட்டம் :————

காரியாதிகாரி உட்பிரிவு :————

கிராமவிதானை உட்பிரிவு :————

கிராமம் :————

கமத்தொழில் இளைஞர் கழக பெயரும் பதிவு எண்ணும் :————

முழுப்பெயரும் முகவரியும் :————

பிறந்த தேதி :————

தேசீய இனம் :————

கலாசாலை தராதரங்கள் :————

கடந்த மூன்றுண்டு கால கமத்தொழில் விபரங்கள் :————

கடந்த ஈராண்டு காலத்திலும் க. இ. க. தொழில் முயற்சி விபரங்கள் :————

இயந்திர இயக்க அனுபவங்கள் :————

————
மனுதாரின் ஒப்பம்.

தேதி :————

**மனுதாரின் பெற்றோர்/பாதுகாவலர் ஒப்பமிடவேண்டிய உறுதிப்பத்திரம்**

ஜப்பானில் உள்ள கமத்தொழில் இளைஞர் கழக செயல்களில் விசேட பயிற்சி பெற மனுச்செய்துள்ள................................வின் பெற்றோர்/பாதுகாவலர் ஆகிய யான், குறித்த மனுதார் தெரிவு செய்யப்படுங்காலையில் இவ்விசேட பயிற்சி பெறுதற்கு ஜப்பானுக்குச் செல்வதற்கு மனுதாரை அனுப்புதற்கு இத்தால் சம்மத மளிக்கின்றேன்.

————
பெற்றோர்/பாதுகாவலர் ஒப்பம்.

பெயர் :————

முகவரி :————

தேதி :————

க. இ. க. தலைவரது ஒப்பமும் முத்திரையும் :————

தேதி :————

க. வி. கோ. உ. சிபார்சுகள்.

————
க. வி. கோ. உ. ஒப்பம்.

தேதி :————.

## வளிமண்டல ஆய்வுப் பகுதி

வளிமண்டல ஆய்வுப்பகுதியில், II ம் வகுப்பு, படம் வரைபவர் உத்தியோகத்திற்கான விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்வுத்தியோகத்திற்கான சம்பளம் வருடமொன்றுக்கு ரூபா 1,260–120–3,780 விகிதமாகும்.

விண்ணப்பிப்பதற்கான கடைசித்தினம் 1959 ம் வருடம் மார்ச் மாதம் 6 ஆம் திகதியாகும்.

முழு விபரங்களுக்கும் 20.2.1959. இல் வெளிவரும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆங்கிலப் பகுதியில் முதலாவது பாகம் இரண்டாவது பிரிவு—விளம்பரங்களுக்குரிய தொகுதியைப் பார்க்கவும்.

பதில் அதிபர்.

வளிமண்டல ஆய்வுப் பகுதி,
புல்லேர்ஸ் வீதி,
கொழும்பு-7.

---

# பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

இல. 1/3/5 (ஜீ).

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ம் நவம்பர் மாதம் 14 ந , 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6 ம் திகதிகளில், 11564, 11584, 11659 இலக்கங்களைக் கொண்ட அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட, 1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ந், நவம்பர் மாதம் 11 ந், 1959 ம் ஆண்டு, ஜனவரி மாதம் 30 ம் திகதிகளிடப்பட்ட தனித்தனி விளம்பரங்களைத் தொடர்ந்து, 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் நியமனம் பெறுதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

| பெயர் | விலாசம் |
|---|---|
| அபேசேகர, சு. | அலுத்வத்தை, இகலவிடியலே, கரகொடை, உயன்கொடை |
| அபேசேகர, ம. ஆ. | 42, பன்னலே தெரு, குலியாபிட்டி |
| அலோசியஸ், அ. மு. இ. | எட்டிரிப்புவை, லிகிரியாகமை |
| ஆரியசேன, கு. க. | பல்லியவத்த, நாரிகம, ஹிக்கடுவை |
| இம்மனுவேல், செ. | பனங்கட்டுக்கொட்டு, மன்னூர் |
| இரண்பண்டா, இ. ஹா. | கலவானேகமை, வாரியாபொலே |
| இரண்பண்டா, கு. கெ. | பிரிவு வருமான அதிகாரி காரியாலயம், அட்டகலன்பண்ணே |
| இரண்பண்டா, த. மு. | மத்திய கல்லூரி, அங்கும்புறை |
| இரத்னபால, கொ. தொ. | கிராம நீதிஸ்தலம், பலாங்கொடை |
| இராசரத்தினம், இ. | குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளை |
| இராசலிங்கம், நா. | இளங்கோ வீதி, சங்கானை |
| உபசேன, ஜ. மு. | எத்கந்தவக, ஹுனுவத்தை |
| எட்மன், மி. க. | மகுறை பள்ளிக்கூடம், இலப்பந்துறை |
| எட்மண்ட், க. தொ. | முதுகமுவை அரசினர் கலவன் பாடசாலே, ருவான்வெல்லே |
| எதிரிசிங்க, க. க. | நாரன்வலே, வெலிவேறிய |
| கண்ணங்கர, பி. | காணிப் பதிவு காரியாலயம், பதுளை |
| கந்தசாமி, சி. | ஏழாலே வடக்கு, நாவலிவயிரவரடி, சுன்னுகம் |
| கமகே, லெ. | அகுறு கொடை, கம்புறுபிட்டி |
| கருணாரத்ன, தொ. ஆ. | 69/9, மகாவத்தை, கொழும்பு, 14 |
| கல்பொட, ம. பு. | பொ/முன்னைநாள் பட்டாளச் சேவையாளர் பாடசாலே, பொலன்னறுவை |
| கனகசிங்கம், க. | ஆயத்தடி, மிருசுவில் |
| கார்த்திகேசு, த. | 6 ம் வட்டாரம், புங்குடுதீவு |
| கிரிபண்டா, ஹி. பி. ஆ. மு. | சுகாதார சேவை சுபிரிண்டெண்டண்ட் காரியாலயம், புத்தளம் |
| கிரிமுதியாண்சே, எ. மு. | பிஸ்கால் காரியாலயம், குருணுகலே |
| கீர்த்திரத்ன, க. பே. | பல்லேஹேவாபொலே, பிலெஸ்ஸை |
| குணசேகர, இ. ஜ. மு. | அலனுவை, குலியாபிட்டி |
| குணசேகர, ஜோ. | பிரிவு வருமான அதிகாரி காரியாலயம், கொட்டபொலே |
| குணசோம, ஹெ. மு. மி. | கல்முறுவை, மாதம்பை |
| குணதாச, க. லி. | தள்கம்பளை, காலி |
| குணதாச, ஜ. பி. | அங்கங்கல அரசினர் பாடசாலே, குறுணகல் |
| குணதிலக, ஹொ. பே. | இதரம்முல்லே, நாகொல்லாகொடை |
| குணரத்ன, ரா. மு. | வித்தியாலன்கார பிரிவென, களனி |
| குணவர்தன, பெ. | பன்சில் கொட, மினுவங்கொடை |
| குல்சேன, கு. ம. | ஞாணணந்த மாவத்தை, எத்கந்துறை, அம்பலாங்கொடை |
| கேதாரநாதன், இ. | நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை |
| கொஹொம்பன், மெ. மு. | வல்பிட்டை வடக்கு, போத்தலே, காலி |
| கோபாலகிருஷ்ணன், க. | துன்னுலே வடக்கு, கரவெட்டி |
| கோபாலபிள்ளை, க. | 24/3, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம் |
| சந்திரசேன, ஹ. வி. | ஸ்ரீ சுமங்கல தெரு, பட்டதுவை, காலி |
| சந்திரதாச, இ. லி. | "வெத நிவச" சர்கில்லர் தெரு, உயன்வத்தை, மாத்தறை |
| சமரதுங்க, மா. | பொல்வத்தை, அம்பலாங்கொடை |
| சமரநாயக, பி. | கொம்பத்தல்ல கொரட்டுவை, வெலிகேனே, போபாகொடை. |
| சர்தாசேன், க. | தொடகமுவை, ஹிக்கடுவை |
| சல்மன், க. வி. | போபிட்டி வீதி, யடதொலவத்தை, மதுகாமம் |
| சார்ல்ஸ், அ. | தந்தி பரிசோதகர் காரியாலயம், நீர்கொழும்பு |
| சிரிசேன, அ. க. | கபுகெதரவத்தை, பத்தேகமை தெற்கு, பத்தேகமை |
| சிரிசேன, மா.க. | மாகெதரை, யக்கலமுல்லே |
| சிரிபால, எ. | 20/4, விஜிதா தெரு, வல்லம்பிட்டி |
| சில்வா, அ. சி. | நாகொடை, களுத்துறை |
| சீபர், மு. த. மு. | 58/2, மகூதி தெரு, களுத்துறை |
| சுகதபால, சே.யா. | அரசாங்க கருமமொழி அலுவலகம், கொழும்பு 7 |
| சுகதபால, லி. | முல்லகந்தகன்திய, பதுல்பான, லேல்லுபிட்டி |
| சுமதிபால, கு. அ. | சுபிரிண்டெண்டண்ட் மேற்பார்த்து, திப்பொலகந்த தோட்டம், வெயங்கள்ளை, அகலவத்தை |
| செனவிரத்ன, மா. ஆ. ஜீ. பெ. | தலமுல்லே, களுத்துறை |
| செனவிரத்ன, பை. தி. அ. ச. ம. | "அனோமா" டயஸ் பிளேஸ், பாணந்துறை |
| சைமன் சிஞ்ஞோ, த. லே. | விவசாய குடியேற்றம், கதானே, ஹொறணே |

| பெயர் | விலாசம் |
|---|---|
| டிகிரி பண்டா, தெ. மு. ஞா. | பிரிவு வருமான அதிகாரி காரியாலயம், வாரியப்பொல |
| டேவிட், தி. க. | விக்கல்கே வத்தை, அப்பாவன, வஞ்சாவலே |
| ஞானதாச, க. | பைத்திய ஆஸ்பத்திரி, மீகாதென்னே |
| ஞானபால, ப. | 84, மாரபன, இரத்தினபுரி |
| த சில்வா, கா. க. ல. செ. பி. | 353, சுனத்கிரி, வராகொடை, களனி |
| த சில்வா, கொ. சோ. | 51, காலி தெரு, களுத்துறை வடக்கு |
| தம்பிப்பிள்ளை, வெ. | முனைக்காடு, கொக்கட்டிச் சோலை (கீ. மா.) |
| தயாரத்ன, மா. தொ. | ஜம்புறலிய, மடபாத்த |
| தர்மசிரி, ர. ப. | அருக்கொடை, தனேவிட்டை |
| தர்மசேன, வ. | வரகா கொடை, நாபொடை |
| தனபாலசிங்கம், க. | வர்த்தலே விளான், தெல்லிப்பளை |
| தியாகராசா, சு. | அரசாங்க வயோதிபர் இல்லம், கைதடி |
| திலகரத்ன, வீ. பே. | ஏனபொல, பத்தம்பிட்டி, றம்புக்கனை |
| நந்தபால, கா. வி. செ. | கல்வளவத்தை, மகவிலே, பாணந்துறை |
| பண்டார, சா. | ஸ்தல ஆட்சி காரியாலயம், புகையிரத நிலைய தெரு, மாத்தறை |
| பந்துபால, கொ. க. | கோனகலே, தெல்துடுவை, இந்துருவை |
| பரம்சோதி, ப. | 139, 4 ம் குறுக்குத் தெரு, கொழும்பு, 11 |
| பாக்கியநாதன், பூ. | 31, கண்டி வீதி, மாத்தளை |
| பால்தசார், பி. ட. ஜோ. | 5, அர்ச். அந்தோனியார் வீதி, மட்டக்களப்பு |
| பாலசிங்கம், க. | தையிடி கிழக்கு, காங்கேசன்துறை |
| பாலசுப்பிரமணியம், த. | தபால் அதிகாரி மேற்பார்த்து, தபால் நிலையம், புத்தளம் |
| பியசேன, தீ. து. | திஸ்ஸ மத்திய கல்லூரி அதிபர் மேற்பார்த்து, களுத்துறை வடக்கு |
| பியதாச, தி. க. | நிகபொத, போபிட்டி |
| பியதாச, வி. க. | கிரிள்ளஹேனே, முருத்தாமுறை, அக்மணை |
| பியதாச, வீ. சா. | நுகேகொடை, தெவுந்தறை |
| பியதாச, ஜ. | ஸ்ரீ சுஜனந்த ரமய, மகாஉடுவை, கனன்விலே, ஹொரணை |
| பிரடீ சரத், ஹே. தொ. | வெலிபிட்டியவத்தை, அபுருகலே |
| பிரான்சிஸ் சேவியர், சூ. | பெரும்பகுதிப் பதிவுகாரர் க ரியாலயம், யாழ்ப்பாணம் |
| பிரேமசந்திர, ம. அ. | 54/1, யக்கலே தெரு, கம்பஹா |
| பெர்னாண்டோ, எ. வி. | 8, பாடசாலே ஒழுங்கை, இரத்தனபிட்டி, பொரலஸ்கமுவை |
| பெரியதம்பி, சி. | மயிலிட்டி, காங்கேசன்துறை |
| பெரேரா, தி. தெ. | தலாஹேன, மலாபே |
| பெரேரா, வி. ஆ. த. | பிரிவு வருமான அதிகாரி காரியாலயம், களவானே |
| பெனட், மா. தொ. | கொஸ்வத்தகொடை, தர்கா டவுன் |
| பேமசிரி, சோ. அ. | கொஸ்வத்தை, கலவானே |
| பொடிநிலமெ, வ. ஆ. | கேகாளே/அம்புலுகலே சிங்கள கலவன் பாடசாலே, மாவனள்ளை |
| முகம்மத் அஷ்ரப், மு. அ. | 19, முகியத்தீன் மசூதி தெரு, யாழ்ப்பாணம் |
| மைக்கல், சி. | பிரிவு வருமான அதிகாரி காரியாலயம், பொத்துவில் |
| மௌலானு, செ. அ. மௌ. செ. ஹ. | ஸ்தல/ஸ்தாபன ஆட்சிப் பகுதி, த. பெ. 500, கொழும்பு |
| யசரத்ன, வி. ஆ. | விவசாய, உணவு அமைச்சு, கொழும்பு |
| யாபா, லொ. பி. | உடுவலை தெரு, அம்பிட்டி, கண்டி |
| யோகசுந்தரம், க. | ஏழாலே வடக்கு, சுண்ணுகம் |
| விக்கிரமசேன, பூ. வி. | வித்தியாலோக வித்தியாலே, யடியந்தொட்டை |
| விக்கிரமரத்ன, எ. ஹே. | அலுத்கொடை, திக்வெள்ளை |
| விக்கிரமரத்ன, ந. ஆ. | " விமல செவன ", நரவுள்பிற்ற வடக்கு, ஹக்மணை |
| விமலசேன, ஹி. எ. | பொல்கொறட்டுவை, தியகஹ, நாயிமனை, மாத்தறை |
| விஜயதாச, அ. கெ. | கலபாவ, வெஉடை |
| விஜேநாயக, வி. ஹெ. மு. | இகல வீரகொடியான, பனிரேந்துவ, மாதம்பை |
| வீரகோன், பி. | யடியாவலே, கட்டுகஸ்தொட்டை |
| வீரதுங்க, சு. ப. | பதுளை/மொறெதொட்டை பாடசாலே, ஹாலிஎலே |
| வீரப்பெரும, மை. | அல்பே, எல்லே |
| ஜயசிங்க, ர. ப. | ஹில் லெண்ட் தோட்டம், தெபொக்ஹேனே, கித்துள்கலே |
| ஜயவீர, ச. | மகுல் பொத அரசினர் பாடசாலே, இப்பகமுவை |
| ஜயவீர, பி. மு. | 46/2, ஸ்ரீ மங்கல தெரு, மாத்தறை |
| ஜீவன், ப. தெர். | 231, தலுப்பிட்டி, கடவத்தை |
| ஜுனைத் உடையார், செ. ஆ. மு. | எஸ். ஓ. அன் சன்ஸ் மேற்பார்த்து, கெலிலிப்பிட்டி அறநயக. |
| ஹின்னிமகாத்மயா, வ. தொ. | மிட்லண்ட் ஓட்டல், நோட்டன்பிரிஜ் |
| ஹுல், எ. வி. | 38, பொஸ்வெல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு |
| ஹெக்டர் ரனசேன, த. மு. க. | அ/குஞ்சுட்டுவை சிங்கள கலவன் பாடசாலே, கெபிதிகொள்ளாவை, மதவாச்சி |
| ஹேமபால, சு. ப. | மெதகம்பிட்டி, திவுல்பிட்டி |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனல் இடங்கள் காலியாக வரும் பொழுது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்கு பரீட்சார்த்தமானவையாக இருக்கும். இவர்கள் ஒரு வைத்திய பரிசோதனைக்கும் பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த நிபந்தனைகளுக்கும் உள்ளாவர்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1959 ம் ௵ பெப்ருவரி ௴ 17 ந உ.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேரிப் பிரதிக்காரியதரிசி.

---

## நில அளவைப் பகுதி

### படம் வரை அறிஞர்களைச்சேர்ப்பதற்கான பரீட்சை

**பரீட்சை நிகழும் திகதி.**—நில அளவைப் பகுதியில் படம்வரை அறிஞர்களாகச் சேர விரும்பும் பரீட்சார்த்திகளுக்குப் போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளினும் 1959 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ந் திகதியில் கீழ்க்காணும் தானங்களில் நடத்தப்படும்.

கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருநாக்கல், மட்டக்களப்பு.

2. போதிய அளவு பரீட்சார்த்திகள் சேராத எந்தத்தானமும் நீக்கப்படும்.

3. **சம்பளம்.**—சித்தியெய்திய பரீட்சார்த்திகள் கீழ்க்காணும் சம்பள விகிதப்படி மூன்று வருஷத்திற்கு தகுதிகாண் நிலையிலுள்ள படம்வரை அறிஞர்களாகத் தெரியப்படுவர் :—

வருடமொன்றுக்கு ரூபா 960 ஆகக் தொடங்கி, வருடமொன்றுக்கு ரூபா 72 கொண்ட இரண்டு சம்பள ஏற்றம் பெற்று வருடம் ஒன்றுக்கு ரூபா 1,104 ஆக உயரும்.

தகுதிகாண் நிலைக்கால எல்லை முடிவில் தகுதிப்பரீட்சையில் சித்தியெய்துவோர் இரண்டாம் வகுப்புப் படம்வரை அறிஞர் பிரிவில் கீழ்க்காணும் சம்பள விகிதத்தில் நியமிக்கப்படுவர்.

வருடமொன்றுக்கு ரூபா 1260 ஆகத் தொடங்கி, வருடமொன்றுக்கு ரூபா 120 கொண்ட சம்பள ஏற்றம் பெற்று, வருடத்திற்கு ரூபா 3780 ஆக உயரும்.

வருடத்திற்கு ரூபா 2820 ஆவதற்குமுன்பு முட்டறு நிலைப் பரீட்சை உண்டு.

இச்சேவையில் உயர்தரங்களுக்குரிய சம்பள விகிதம் பின்வருமாறு :—

படம்வரை அறிஞர் 2 ஆம் வகுப்பு — வருடம் ரூபா 1260 இலிருந்து ரூபா 3780 வரை
21 தடவை, வருடம் ரூபா 120 வீதம்.
ரூபா 2820 இற்கு முன்பு முட்டறுநிலை.

படம்வரை அறிஞர் 1 ஆம் வகுப்பு — வருடம் ரூபா 3900 இலிருந்து ரூபா 5340 வரை
8 தடவை, வருடம் ரூபா 180 வீதம்

படம்வரை அறிஞர் விசேட வகுப்பு — வருடம் ரூபா 5580 இலிருந்து ரூபா 6540 வரை
4 தடவை, வருடம் ரூபா 240 வீதம்

விற்பன்னப் படம்வரை அறிஞர் 2 ஆம் தரம் — வருடம் ரூபா 2580 இலிருந்து ரூபா 4620 வரை
11 தடவை, வருடம் ரூபா 120 வீதம்
4 தடவை, வருடம் ரூபா 180 வீதம்
ரூபா 3900 இற்கு முன்பு முட்டறுநிலை.

விற்பன்னப்படம்வரை அறிஞர் 1 ஆம் தரம் — வருடம் ரூபா 4800 இலிருந்து ரூபா 6540 வரை
3 தடவை, வருடம் ரூபா 180 வீதம்
5 தடவை, வருடம் ரூபா 240 வீதம்
ரூபா 5340 இற்கு முன்பு முட்டறுநிலை.

படம்வரைவுக் கந்தோர் உதவியாளர் — வருடம் ரூபா 5160 இலிருந்து ரூபா 8880 வரை
9 தடவை, வருடம் ரூபா 360 வீதம்
1 தடவை, வருடம் ரூபா 480 வீதம்

4. **சேவையின் நிபந்தனைகள்.**(அ) அரசாங்க சேவையில் புதிதாக சேர்ந்தவர்கள் விடயத்தில், விடுதலை கொடுப்பதும் மற்றும் நிபந்தனைகளும் 1946 ஆம் ஆண்டின் 8 ஆம் அமர்வுக்காலப் பத்திரத்தின் தகவுரைகளால் மாற்றியமைக்கப்பட்டபடி, 1934 ஆம் ஆண்டின் 8 ஆம் அமர்வுக்காலப் பத்திரத்திலுள்ள தகவுரைகளாற் கட்டுப்படுத்தப்படும்.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தெரிவு செய்யப்பட்டதும், தமது தகுதிகாண் நிலைக்காலம் முடித்துத் தகுதிப் பரீட்சையிலும் சித்திபெய்திய பின்பு, நில அளவைப் பகுதியில் 2 ஆம் வகுப்புப் படம்வரை அறிஞராக ஐந்து வருட காலம் சேவை செய்வதாக ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். அவர் அக்காலத்தில் தமக்குக் கொடுக்கப்படும் வேலைகள் எல்லாவற்றையும் கவனத்துடனும் திறமையுடனும் செய்தல் வேண்டும். 2 ஆம் வகுப்புப் படம்வரை அறிஞராகச் சேவை செய்யும் ஐந்து வருடகாலம் முடியுமுன்பு நில அளவைப் பகுதியை விட்டு விலகும் சமயத்தில் அவர் நில அளவைப்பகுதிக்கு (ரூபா 2000) இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பதாக இரண்டு அங்கீகரிக்கப்பட்ட பிணையாளிகளைக் கொண்ட உடன்படிக்கையைச் செய்து கொள்ளல் வேண்டும். தகுதிகாண் நிலைப்படம்வரை அறிஞராக நியமிக்கப்படும் திகதியில் இருந்து இவ்வொப்பந்தமும் உடன்படிக்கையும் அனுசரணைக்கு வரும், படம்வரை அறிஞர்கள் இடமாற்றத்திற்காளாவார்கள். அவர்களை இலங்கையில் உள்ள எந்த இடத்திற்கும் மாற்றலாம். தகுதிகாண் நிலையிலுள்ள படம்வரை அறிஞர்கள் தெரிவு செய்யப்பட்டதும் படம்வரை அறிவில் பூரண பயிற்சி அளிக்கப்படுவார்கள்.

அவர்கள் மூன்று வருடத் தகுதிகாண் நிலைக்காலம் முடிந்ததும் இரண்டாம் வகுப்புப்படம்வரை அறிஞர்களாக நியமனம் செய்யத் தகுதியுடையும் பொருட்டு ஒரு தகுதிப் பரீட்சையில் சித்தியெய்தும்படி கேட்கப்படுவார்கள். மூன்று வருடத் தகுதிகாண் நிலைக்காலம் முடிந்ததும் நிகழும் தகுதிப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறும் தகுதிகாண் நிலைப்படம்வரை அறிஞர்கள், அத்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்த மீண்டும் இருமுறை இயலுமாறு அனுமதிக்கப்படுவார்கள். இக்காலத்தில் வருடமொன்றுக்கு —ரூபா 960 ல் தொடங்கி 2 தடவை வருடம் ரூபா 72 சம்பள ஏற்றம் பெற்று வருடத்திற்கு ரூபா 1104 வரை உயரும். சம்பள விகிதத்தைக்கொண்ட தகுதிகாண் நிலையிலிருந்து அவர்கள் கடமையாற்றுவார்கள். தகுதிப் பரீட்சையிற் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்கள் உத்தியோகத்தில் நின்று நீக்கப்படுவார்கள்.

தகுதிகாண் நிலைக்காலத்தில் அவர்களது வேலையும் ஒழுக்கமும் திருப்தியற்றனவையாக இருந்தால் எப்பொழுதும் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(இ) நியமனங்களுக்கு ஒய்வுச் சம்பள உரிமையுண்டு. ஆனால் உத்தியோகத்தர்கள் இரண்டாம் வகுப்புப் படம்வரை அறிஞர்களாக நியமிக்கப்படும்வரை ஒய்வுச்சம்பள உரிமைகளைப் பெறமாட்டார்கள்.

(ஈ) தகுதிகாண் நிலைப்படம்வரை அறிஞர்களாக் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் 31-1-58 ல் வெளிவந்த 428 ம் இலக்க திறைச்சேரிச் சுற்றறிக்கையின் (2) (B) (V) பந்திப்படி " பின்பு சேர்ந்தவர்களாக " இருந்தால் அரசாங்கத்தின் பாசைக்கொள்கைக்கமைய, ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இதன்பிறகு ஆக்கப்படும் விதிகள் எவற்றிற்கும், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க பாசைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும் இணங்கியொழுகுமாறு வேண்டப்படுவார்கள்.

அத்தகைய் பரீட்சார்த்திகள் (18) ம் பந்தியில் கூறப்பட்டுள்ள (i) முதல் (iv) வரையுமுள்ள பாடங்களை சிங்கள பாசை மூலத்தில் எடுக்காது தெரிவு செய்யப்பட்டிருந்தால் தமது தகுதிகாண் நிலைக்காலத்திற் சிங்களம் கற்றல் வேண்டும். இப்பரீட்சார்த்திகள் 2 ம் வகுப்புப் படம்வரை அறிஞர்களாக்த் தங்களது தகுதிகாண் நிலைக் காலமுடிவில் நியமிக்கப்படுவது அவர்களது திருப்தியான வேலை நல்லொழுக்கம் என்பவற்றையும் மேற்கூறப்பட்ட (ஆ) பிரிவில் உள்ள தகுதிப் பரீட்சையில் சித்தியெய்துவதோடு சிங்களப் பாசையில் ஒரு பரீட்சையிலும் சித்தியடைவதையும் பொறுத்திருக்கிறது.

தகுதிகாண் நிலைக்கால எல்லையின் குறிக்கப்பட்ட தேர்ச்சியை சிங்கள பாசையில் அடையாதவர்கள், வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்கள். ஆனல் அவர்கள் இந்த அரசாங்க பாசையைக் கற்பதற்கு உண்மையான முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்று நில அளவையாளர் தலைமை அதிபதி திருப்தியடைந்தால், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவது பிற்போடப்படும். அதே பரீட்சையில் பின்பு ஒரு நியாயமான கால எல்லைக்குள் சித்தியடைவார்களானல் நில அளவையாளர் தலைமை அதிபதி உசிதாரப்படி, அவர்கள் சிரேட்டத்துவக் கிரமத்தில் இழந்த நிலையை மீட்டுக்கொள்ளலாம்.

5. **விண்ணப்பங்கள்.**—இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்காக நில அளவையாளர் தலைமை அதிபதியின் கந்தோர், கோட்டை, கொழும்பு, என்னும் விலாசத்தில் 1959 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4 ந் திகதி வரை பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணபப்பத்திரங்கள் மூன்று பாஷைகளிலும் பெறற்பாலன. இப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது பரீட்சார்த்திகள் இவ்வறிவித்தலின் 18 ஆம் வாக்கியத்தின் 4 வது பிரிவிலுள்ள குறிப்புக்கமைய எப்பாஷை மூலம் பரீட்சையை எழுத விரும்புகிறார்கள் என்பதைக் கூறல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட தபாலில் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்பு நில அளவையாளர் தலைமை அதிபதி, தபால் பெட்டி எண் 506, கொழும்பு, என்ற விலாசத்தை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். 1959 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ந் திகதிக்குப்பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் அங்கீகரிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தில் ரூபா 15 பெறும்தியுள்ள முத்திரை அல்லது முத்திரைகள் ஒட்டப்பட்டுக் கையொப்பமிட்டு அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. நில அளவையாளர் தலைமை அதிபதி ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை அவற்றிற்குரிய பரீட்சார்த்திகளிடம் திருப்பி அனுப்புவார். இப்பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும்பொழுது, நில அளவையாளர் தலைமை அதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களையும் அவர்களது கையெழுத்துப் பத்திரங்களையும் பரீட்சையை மேற்பார்க்க நியமிக்கப்பட்டும் உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**8. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை கண்டிப்பாகப் பிரமாணங்களுக்கு அமையவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தோடு அனுப்பப்பட வேண்டிய சரியான சாசனங்களுடன் அனுப்பப்படாததும் வேறு எந்த விடயத்திலாவது குறைபாடுடையதுமான எந்த விண்ணப்பமும் அங்கீகரிக்கப்படமாட்டாது.**

**தகுதி :—**

9. பரீட்சார்த்திகள் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

10. பரீட்சார்த்திகள் இலங்கையராக இருத்தல் வேண்டும். பரம்பரையால் அல்லது பதிவால் இலங்கைப் பிரஜையானவர் இலங்கையராவர்.

11. பரீட்சார்த்திகள் 1959 ஆம் ஆண்டு ஏப்றல் மாதம் 1 ந் திகதி 17 வயதிற்குக் குறையாமலும் 22 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

12. பரீட்சார்த்திகள் தாம் முன்பு இலங்கைச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) அல்லது வேறு மேற்பரீட்சையில் சித்தியெய்திருப்பதற்கு அத்தாட்சி காட்டுதல் வேண்டும்.

**சலுகைகள் :—**

13. **நிரந்தர உத்தியோகத்தர்கள்.**—(அ) நில அளவைப்பகுதியில் 1959 பெப்ருவரி 14 ல் நிரந்தர பதவியில் உத்தியோகம் வகிப்பவர்கள்

கீழ் வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால், இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(i) அவர்கள் 12 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரங்களை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1959 ஏப்றல் 1 ல் 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) அவர்களது சேவை திருப்தியானதாக இருந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—24–6–56 ற்கு முன்பு நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடையும் மேற்கூறிய வகையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்க பாஷைக் கொள்கை விஷயத்தில் " முன்பு சேர்ந்தவர்களாகக் " கருதப்படுவார்கள்.

(ஆ) அரசாங்கத்தில் 1959 மார்ச்சு முதலாந் திகதிக்கு நேராக முன்பு 4 வருடம் தொடர்ந்த சேவை செய்த நில அளவைப் பகுதி நிரந்தர உத்தியோகத்தர்கள் கீழ்க் கூறுப்பட்டிருக்கும் நிபந்தனைகட்கு உட்பட்டிருந்தால் இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படுவார்கள்.

(i) அவர்கள் குறைந்தது கேம்பிரிட்ச் கனிஷ்ட பரீட்சை அல்லது கல்விப்பகுதியின் கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சை அல்லது கல்விப் பகுதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையினது கனிஷ்டப் பாடசாலைப்பத்திரப் பரீட்சையைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) அவர்க்ள் 1959 எப்ரல் முதலாந் திக்தி 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1956 செப்ரம்பர் மாதம் 24 ந் திகதிக்கு முன்பு நியமிக்கப்பட்டு இப்பரீட்சையில் சித்தியடையும் மேற் கூறப்பட்ட வகையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசாங்கப்பாஷை விஷயத்தில் " முன்பு சேர்ந்தவர்களாகக் " கருதப்படுவார்கள்.

(இ) **தற்காலிக உத்தியோகத்தர்கள்.**—நில அளவைப்பகுதியில் தற்காலிக பதவிகளிலிருப்பவர்கள் பின்வரும் நிபந்தனைகட்கு உட்பட்டிருந்தால் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(i) அவர்கள் 12 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித்தராதரங்களை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) அவர்கள் 1959 எப்றல் முதலாந் திகதி 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) அவர்கள் 1959 மார்ச்சு 10 க்கு நேராக முன்பு நில அள்வைப் பகுதியில் குறைந்தது ஒரு வருட தொடர்ந்த சேவை செய்திருத்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் ஏற்பதற்கு குறிக்கப்பட்டிருக்கும் கடைசித் திகதிக்கு முன் ஒரு வருடம் தொடர்ந்த சேவை).

(ஈ) அரசாங்கத்தில் மார்ச்சு 1, 1959 ற்கு நேராக முன்பு 4 வருடம் தொடர்ந்த சேவை செய்த நில அளவைப் பகுதித் தற்காலிக உத்தியோகத்தர்கள் (13) (ஆ) பந்தி நிபந்தனை (i) லும் (ii) லும் கூறப்பட்டுள்ள தர்ாதரங்களை உடையவர்களாக இருந்தால், இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சிய சேவையால் வேலையிலிருந்து விடப்பட்ட உத்தியோகத்தர்கள்.**

(உ) இலங்கையிலுள்ள அந்நிய நாட்டுத்தளங்களை எடுக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வேலையிலிருந்து 6–7–56 ல் விடப்பட்ட அல்லது 6–7–56 க்கு பின்பு விடப்பட்ட அல்லது இனிமேல் விடப்படும், இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய ஸ்தாபனங்களினது, இராணுவத்தினரல்லாத இலங்கையராகவுள்ள பொது உத்தியோகத்தர்களும், நாறென்பிட்டியிலுள்ள (ஆண்டெர்ஸன் நிலையம்) அரச கடற்படைக் கம்பியில்லாத் தந்தி நிலையத்தை திருகோணமலைப் பெரும் பகுதியிலுள்ள பெரியகரச்சிக்கு மாற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம், 27–9–54 ற்குப் பின்பு, வேலையிலிருந்து விடப்பட்ட இந்நிலயத்தினது உத்தியோகத்தர்களும், கீழ்வரும் சலுகைகளைப் பெற அருகதை உடையவர்களாவார்கள்.

(i) ம் (ii) ம் பந்தியில் கூறப்பட்ட வயது எல்லைக்காக வயதைக் கணிப்பதற்கு, அவர்கள் ஐக்கிய இராச்சிய சேவைகளில் தாங்கள் செய்த சேவை தொடர்ந்ததாகவும் திருப்தியானதாகவும் இருந்தால் அச் சேவைக் காலங்களை தங்களது வயதிலிருந்து குறைப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) மார்ச்சு 1, 1959 ல் அல்லது அதற்கு முன் இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சிய சேவைகளில் 4 வருடம் தொடர்ந்தும், திருப்தியாகவும் சேவை செய்தவர்கள், 12 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரங்களை உடையவர்களாக இல்லாதிருந்தும், (13) (ஆ) (i) பந்தியில் கூறப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருக்கும் பட்சத்தில் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**குறிப்பு.**—ஐக்கிய இராச்சியச் சேவைகளில் செய்த சேவையின் மூல தராதரப் பத்திரங்கள் விண்ணப்பங்களோடு இணைக்கப்படல் வேண்டும்.

**சேமப்படையினர்.**—(ஊ) சேமப்படையினர்.—முறையான நிரந்தரப் படையில் சேவை செய்த பின்பு சேமப்படைக்கு மாற்றப்பட்ட ஆயுதப் படையினர் பின்வரும் சலுகைகளைப் பெற அருகதையுள்ளவர்கள்.

(i) 11 ம் பந்தியில் கூறப்பட்ட வயது எல்லைக்காக வயதைக் கணிப்பதற்கு, முறையான படையில் உள்ள சேவைக் காலத்தைக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) முறையான படையில் 4 வருடத்திற்குக் குறையாமல் சேவை செய்திருந்தவர்கள் 12 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள கல்வித் தராதரம் இல்லாதவர்களாகவிருந்தாலும், (13) (ஆ) (i) பந்தியில் கூறப்பட்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்திருந்தால், இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

14. **தகுதிக்குரிய சாசனங்கள்.**—விண்ணப்பத்துடன் கீழ்வரும் மூலசாசனங்களும் அனுப்பப்படவேண்டும்.

(அ) பொறுப்புள்ள, ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி அரசாங்கப் பாடசாலையில் அல்லது உதவி பெறும் பாடசாலையிற் கல்வி பயின்றவராயின் நற்சான்றுப்பத்திரம் அவர் கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலையின் அதிபரால் கைச்சாத்திடப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது ஒரு சமாதான நீதவானால், வழக்கறிஞரால், நியாயதுரந்தரரால் அல்லது நொத்தாரிசால் அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரால், அல்லது வருடம் ஒன்றுக்கு 2400 அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரால் அல்லது பரீட்சார்த்தியைப் பற்றிய விபரத்தை இலகுவில் தரக்கூடியவரும், பிரபலஸ்தருமான ஒருவரால் கைச்சாத்திடப்படலாம். நற்சான்றுப் பத்திரத்தில் அதைக் கொடுத்தவரது பெயர், தொழில், விலாசம், முதலியன தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) (i) பரீட்சார்த்தியின் பிறப்புப்பதிவின் அத்தாட்சிப்பத்திரம்.

**குறிப்பு.**—பாடசாலைக்கு அல்லது கல்விக்குரிய உபயோகத்திற்காக வழங்கப்படும் விசேட பிறப்புப் பத்திரமோ பிறப்புப் பதிவிடாப்பிலிருந்து அனுமதிக்கப்பட்ட சுருக்க அத்தாட்சிப்பத்திரமோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**(ii) சத்தியக்கடுதாசிகள் அல்லது ஞானஸ்நானப்பத்திரங்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.**

(iii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கொடுத்ததும் அவர் வழக்கமாக உபயோகிப்பதுமான பெயர் அல்லது அத்தகைய பெயர்கள், பிறப்பு பத்திரத்திலுள்ள பெயர் அல்லது பெயர்களோடு மாறுபடுமானால் பிறப்புப்பதிவு இடாப்பில் அப் பெயரைத் திருத்தி எழுதுவதற்கான சந்தர்ப்பத்திற்கேற்பு, 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ம் அல்லது 28 ம் பிரிவிற் கூறப்பட்டபடி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுத் (திருத்தக்) சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் திருத்திக் கூறப்பட்ட 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 24 (6) ம் பிரிவின்படி, பிறந்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு பதியப்பட்ட பிறப்புப் பதிவின் ஒரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி, பிறந்த திகதி சரியென்று உறுதிப்படுத்திய அத்தாட்சிகளை ஆராய்ந்த பின்புதான், நியமனங்கள் செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டதற்கு ஒரு அத்தாட்சிப் பத்திரம் அல்லது பரம்பரைமூலம் பிரஜா உரிமை கோரியதை ஏற்றுக்கொண்ட உத்தியோக பூர்வமான மூலக்கடிதம் (பொருத்தமானவிடத்து).

(ஈ) கல்வித் தராதரப் பத்திரம் அல்லது தராதரப்பத்திரம் வழங்கப்படாதிருக்கும் சமயத்தில், உத்தியோக பூர்வமான பிற சாசனம்.

(உதாரணம்:—தனிப்பட்ட முறையில் மனுப்பண்ணும் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் இலங்கைக் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையின் பெறு பேற்றுப்பத்திரம், அல்லது பரீட்சார்த்தி கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்ற மூலக்கடிதம்.)

**பொய்யான விபரங்கள் தருவோருக்குரிய அபராதம்**

15. (i) ஒரு பரீட்சார்த்தி இப்பரீட்சையின் பிரமாணங்களின்படி தகுதியற்றவர் என்று காணப்பட்டால், பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்கு பின்போ, எந்நிலையிலாவது அவரைப்பரீட்சார்த்தியென அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

(ii) பரீட்சார்த்தியால் கொடுக்கப்பட்ட விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிக்கு உட்படவே பொய்யானவை என்று காணப்பட்டால் அல்லது தேவையான உண்மைகளை மறைக்கும் நோக்கத்துடன் அவர் கொடாது விட்டால் அல்லது அவரது சேவைக்காலத்தில் எந்த நேரத்திலும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராக இருந்தார் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் உடனே சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(iii) பரீட்சை எடுக்க அனுமதி கொடுத்தமை பரீட்சார்த்தியின் தகுதியை ஒப்புக் கொண்டமையாகாது.

**16. அடையாளச் சீட்டு.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தமது அடையாளத்தைத் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு பரீட்சை மண்டபத்தில் நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்துக்காக கீழ் கூறப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும் :—

(அ) தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாளச் சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகக் கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்டு).

(இ) இப்பரீட்டை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருஷத்திற்குள் ஓர் அரசாங்கப்பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப்படத்தைக்கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிரசாசனம்.

**குறிப்பு.**—(i) தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாளச் சீட்டுகளைப் பெறுவதற்குரிய விண்ணப்பப்பத்திரங்களை இலங்கையிலுள்ள எந்தத் தபாற் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) அனுமதிச்சீட்டோடும், கையொப்பப்பத்திரத்தோடும் மேற் கூறப்பட்ட ஏதாவதொரு சாசனத்தைக் கோண்டுவராத எப்பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**17. பணம் திருப்பிக் கொடுத்தல்.**—

எந்தச் சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்குக் கட்டணமாகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**18. பரீட்சைக்குரிய பாடங்கள்.**—

**(i) பாஷையும் வியாசமும்.**— புள்ளிகள்

(வியாசம், சுருக்கி எழுதல், பாஷையின் சரியான உபயோகத்தை பரீட்சிக்கும் வினாக்கள் ஆகியவற்றைக் கொண்ட 1½ மணி நேர வினாப்பத்திரமாக அமையும்) .. 150

**(ii) கணிதம்.**—

எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், என்பவற்றில் வினாக்களைக் கொண்ட 2 மணி நேர வினாப்பத்திரமாக விருக்கும். .. 150

**(iii) பொது அறிவுப் பத்திரம்.**—

(அ) 50 நிமிடம் விவேகப்பரீட்சை

(ஆ) 50 நிமிடம் பொது அறிவிலும் உள்ளூர் அறிவிலும் பரீட்சை. .. 100

**(iv) படம் வரைதல்:**—இரண்டரை மணி நேர வினாப்பத்திரம். பரீட்சார்த்திகள் அளவு கருவிகளின் துணையின்றி ஒரு தேசப்படத்தின் புறவுருவத்தைப் பெருப்பித்து மையினால் கீறி, வர்ணம் தீட்டிப் பெயர் குறித்தல் வேண்டும். இத்தேசப் படத்தின் மாதிரி ஒன்றைப் பரீட்சையெடுக்க விரும்புவோர் கீழ்வரும் கந்தோர்களில் சென்று பார்க்கலாம்.

(அ) நில அளவையாளர் தலைமை அதிபரின் கந்தோர், கீழ் சதாம் தெரு, கோட்டை கொழும்பு.

(ஆ) மற்றும் காலி, குருநாகல், அநுராதபுரம், பதுளை, கண்டி, டியத்தளாவை, திரிகோணமலை ஆகிய இடங்களிலுள்ள பெரும்பாக அளவைக் கந்தோர்களிலும் பார்க்கலாம். பரீட்சார்த்திகள் கறுப்புப் படம் வரைமை, நீர்நிறப் பூச்சு, படம் வரைதற்கு வேண்டிய உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டு வரல் வேண்டும். .. 150

**குறிப்பு :**—(i) முதல் (iv) வரையுமுள்ள பாடங்களுக்குரிய வினாப் பத்திரங்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று பாஷை மூலங்களிலும் இருக்கும். பரீட்சார்த்திகள் பின்வரும் நிபந்தனை கட்கு இணங்கி 12 ம் அல்லது 13 (ஆ) (i) பந்தியில் கூறப்பட்டுள்ள தகுதியளிக்கும் பரீட்சைகளை சித்தியடைந்த பாஷை மூலத்தில் இப் பாடங்களை எடுத்தல் வேண்டும்.

(அ) தகுதியளிக்கும் பரீட்சையிலுள்ள பாடங்களை வெவ்வேறு பாஷை மூலங்களில் சித்தியடைந்த பரீட்சார்த்தி, இப்பரீட்சையிலுள்ள அப்பேற்பட்ட பாடங்களை அந்த அந்தப் பாஷை மூலங்களிற் தான் எடுத்தல் வேண்டும். பாஷையும் வியாசமும் என்ற இப்பரீட்சைக்குரிய பாடத்தை எடுக்கும் பாஷை மூலத்தில் மற்றப் பாடங்களை எடுத்தல் வேண்டும்.

(ஆ) தகுதியளிக்கும் பரீட்சையை தமிழ் அல்லது ஆங்கில மூலத்தில் சித்தியடைந்த பரீட்சார்த்தி விரும்பினால் இப்பாடங்களைச் சிங்கள பாஷை மூலத்திலும் எடுக்கலாம்.

**(v) ஆங்கிலம் :** (விசேட வினாப்பத்திரம்) : மேலுள்ள முதலாவது பாடத்தை (பாஷையும் வியாசமும்) சிங்களம் அல்லது தமிழில் எழுதுவோருக்கு 1 மணி நேர வினாப்பத்திரம். .. 100

**குறிப்பு :**—இவ்விசேட பாஷை வினாப்பத்திரம் கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குரிய பாடத் திட்டத்திற்கேற்றதாக அமையும். இவ் வினாப்பத்திரம் தெரிவு செய்யப்படுவதற்குரிய தராதரப் பரீட்சைப் பத்திரமாக அமைவதால் இவ்வினாப்பத்திரத்தில் குறைந்தது 40 வீதம் புள்ளிகளாவது தெரிவு செய்யப்படுவதற்கு எடுத்தல் வேண்டும். இவ் வினாப்பத்திரத்தில் பெறும் புள்ளிகள் பரீட்சார்த்திகளின் போட்டி நிலையை நிர்ணயிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**(vi) நேர்முகப் பரீட்சை :** படம்வரை அறிஞர்களாக நியமிக்கப் படுவதற்கு அனுமதிக்கத் தகுதியளிக்கும் பரீட்சையிற் பரீட்சார்த்திகள் சித்தியடைந்ததற்கு வழங்கப்பட்ட மூல தராதரப் பத்திரங்களைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சை நடக்கும்பொழுது கொண்டுவரல் வேண்டும். .. 100

19. இப்பரீட்சை இரண்டு பிரிவாக நடாத்தப்படுகிறது. எழுத்துப் பரீட்சை முதல் நடாத்தப்படும். அதன் பெறுபேறுகளை ஒட்டிப் பரீட்சார்த்திகள் அவர்களது திறமைக்கேற்ப நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகள் தொகையை நில அளவையாளர் தலைமை அதிபதி பரீட்சை அதிகாரியோடு கலந்தாலோசித்துத் தீர்மானிப்பார். எனினும் நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெறுவோரின் தொகை, காலியான இடங்களுக்கு குறைந்தால், நேர்முகப் பரீட்சை நடத்தாமலும் விடலாம். விடைப்பத்திரங்களில் உறுப்பில்லாத கையெழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாதவாறு எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டு நீக்கப்படுதற்கு ஆளாவர்.

**20. வைத்தியப் பரீட்சை :**—சித்தியடையும் பரீட்சார்த்திகள் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்தற்கேற்ற உடல் வலிமையுடையவர் என்பதை நிறுவுதற்காக வைத்தியப் பரிசோதனை செய்யப்படும். அதில் அவர் தகுதியுடையவராகக் காணப்படல் வேண்டும்.

**21. பொது அறிக்கை : வேண்டிய தராதரங்கள் இல்லாத பரீட்சார்த்திகளின் கடிதங்களுக்குப் பதில் அனுப்பப்படமாட்டாது.**

**22. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் முதலாம் பாகம் 2 ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளையும் கவனிக்க.**

23. எழுத்துப் பரீட்சை, பரீட்சை அதிகாரியால் நடத்தப்படும். பரீட்சை அதிகாரியால் ஆக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய பிரமாணங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

**குறிப்பு :** இப்பரீட்சையை யொட்டிய எக்கடிதத்தையும் நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு தனிப்பட்ட முறையில் விலாசமிட்டனுப்பக் கூடாது.

வ். இராசரத்தினம்,
நில அளவையாளர் தலைமை அதிபதி.

நில அளவையாளர் தலைமை அதிபதியின் கந்தோர்,
இல " சி ", தபாற்பெட்டி 506,
கொழும்பு.
1959 ம் ௵ பெப்ருவரி ௴ 14 ந் உ.

---

## சுதேச வைத்தியப் பகுதி

**கொழும்பு அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி 1959-1960 இல் சேர்தல்**

அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரியில் சித்த வைத்தியப் பகுதியில் 1959-1960 ம் ஆண்டிற் சேர விரும்புவோர், கல்லூரிப் பகுதி காரியஸ்தருக்கு, 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.

கல்லூரிக் கந்தோரிலிருந்து பெறப்படும் அதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களிலே விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் தேவைப்படுவோர் அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரிப் பதிவு காரியஸ்தருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கல்லூரியிற் பயிலுங் காலம் ஐந்து வருடங்களாகும். கல்லூரியில் மாணவர்கள் பயில்வதற்கு எவ்வகை வேதனமும் அறவிடப்படமாட்டாது.

ஆனால் மாணவர்கள் தங்கள் விடுதிச் செலவு முதலியவற்றைப் பொறுக்க வேண்டும்.

இக்கல்லூரியிற் சித்த வைத்தியப் பிரிவிற் சேர்ப்பதற்குரிய தராதரங்கள் கீழ்வருமாறு :—

1. ஆரிய—திராவிட பாஷா விருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் " பிரவேச பண்டிதர் ", " பால பண்டிதர் " அல்லது " பண்டிதர் " பரீட்சை ஆகியவற்றுள் ஒன்றிற் தேறியவர்கள் ;

2. தமிழ்—சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் (எஸ். எஸ். ஸி.) தேறியவர்கள் ;

3. ஆங்கில—சிரேஷ்ட தராதரப் பத்திரப்பரீட்சையில் தமிழும் ஒரு பாடமாகச் சேர்த்து எடுத்துத் தேறியவர்கள் ;

4. லண்டன் மெட்ரிக்குலேசன் பரீட்சையில் தமிழும் ஒரு பாடமாகச் சேர்த்து எடுத்துத் தேறியவர்கள்.

குறிப்பு.—1958 ம் ஆண்டு மார்கழி மாதத்தில் சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சை எடுத்தவர்களும், பரீட்சைப் பெறுபேறுகளை எதிர் பார்த்துவிண்ணப்பங்கள் அனுப்பலாம்.

பரீட்சையிற் தேறியிருந்தாற்தான் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

உஷே. ஈ. பி. விக்கிரமசிங்க,
தற்காலிக அதிபர்.

அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி,
கொழும்பு 8,
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 14 ந் வ.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கமத்தொழிற் சேவை இலாகா

### உள்நாட்டு வெங்காயம் விற்பனை செய்தல்

கொழும்பிலிருக்கும் எமது பண்டகசாலைகளிலும், கண்டி, குருநாக்கல், காலி, தங்கலை, அநுராதபுரம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, பதுளை, பண்டாரவளை, நுவரெலியா ஆகிய வெளியூர்களிலிருக்கும் விற்பனைக் கிளைக் கந்தோர்களிலும் பெருந் தொகையான உள்நாட்டு வெங்காயம் விற்பனைக்கு இன்னுஞ் சில வாரங்களில் கிடைக்கும்.

கூட்டுறவு ஐக்கிய விற்பனைச் சங்கம் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், இக்கந்தோருடன் பதிவு செய்யப்பட்ட ஏஜண்டுகள் மூலமாகவும் விற்பனை நடைபெறும்.

இக்கந்தோரில் ஏஜண்டுகளாகப் பதிவு செய்ய விரும்பும் விற்பனையாளர்கள், கமத்தொழிற் சேவை அதிகாரி (உத்தரவாத விலைத் திட்டமும் அரிசி குற்றுதலும்), தபாற் பெட்டி 579, கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதி, ஏஜண்டுகள் எவ்வித பாடுகள் நிபந்தனைகள் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

முழு விபரங்களும் அறிய விரும்பின், கீழ்க் கண்ட விலாசத்திலிருக்கும் உதவி கமத்தொழிற் சேவை அதிகாரியிடம் கேட்டறிந்து கொள்ளலாம். தெலிபோன் இலக்கம் 95051.

336, டீன்ஸ் ரோட், எம். எஸ். பெரேரா,
கொழும்பு 10, கமத்தொழிற் சேவை அதிகாரி.
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 12 ந் வ.

## நீர்ப்பாசனப்பகுதி

வடமேல் பெரும்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர், குருநாகல் அவர்களால் கீழ்க்காணும் நிரந்தரக் கட்டிடங்கள் இராஜங்கணையில் கட்டுவதற்கு 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 4 ந் திகதி காலை 9.30 மணிவரை இப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து தனித்தனிக் கேள்விப் பத்திரங்கள் வரவேற்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புவோர் கேள்விப்பத்திரத்தின் பணத்தைக் கச்சேரியில் அல்லது நீர்ப்பாசன எஞ்சினியர், இராஜங்கணைக் கீழ்ப் பிரிவு காரியாலயத்தில் செலுத்தி முழு விபரங்களுடன் 26. 2. 59—2.3.59 வரைக்கும் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் தனித்தனியே இரு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இப்பகுதியால் ஒரு விதக் கட்டிடப் பொருட்களும் கொடுக்கப்பட மாட்டாது.

| | விபரம் | பதிவு செய்யப்பட்டதும் அவைகட்குக் கூடிய தொகையும் ரூபா | கேள்விப் பணம் ரூபா |
|---|---|---|---|
| 1. | நிரந்தர எஞ்சினியர் வீடு .. | 40,000 | .. 50 |
| 2. | நிரந்தர எஞ்சினியர் காரியாலயம். .. | 40,000 | .. 50 |
| 3. | நிரந்தர உதவி எஞ்சினியர் வீடு .. | 30,000 | .. 50 |
| 4. | நிரந்தரப் பண்டகசாலை .. | 20,000 | .. 25 |
| 5. | நிரந்தர தவேமைக்கினைக் வீடு .. | 30,000 | .. 50 |
| 6. | 2 நிரந்தரக் கனிஷ்ட உத்தியோகத்தர் வீடு. .. | 30,000 | .. 50 ஒவ்வொன்று |
| 7. | நிரந்தர இரட்டைக் கூலியாள் வீடு .. | 15,000 | .. 25 |
| 8. | நிரந்தர ஓவசியர் வீடு .. | 20,000 | .. 25 |

நீர்ப்பாசன எஞ்சினியர்,
இராஜங்கணைத் திட்டம்.

கல்கமுவா,
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 5 ந் வ.

## அரசாங்க கோரிக்கைகள்

### சிந்திக் கூட்டப்பட்ட அரிசி, பழுதடைந்த அரிசி விற்பனை

(அ) 14,000 அந்தர் சிந்திக் கூட்டப்பட்ட அரிசியும் (ஆ) 400 அந்தர் பழுதடைந்ததுமான ஸ்பானிய, எகிப்திய அரிசி மாளிகாவத்தை உணவுப் பண்டசாலைகளிலும், கால்வாய் முற்றக் களஞ்சிய, லோட்டஸ் வீதி, கொழும்பிலும் இலங்கையரால் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் விவசாய உணவு அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால் 4. 3. 59 பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள் இரு ரகத்திலுமுள்ள முழுத் தொகைக்கோ அல்லது நியாயமான தொகைகளுக்கோ ஏற்றுக்கொள்ளப்படும். கோரிக்கை விதத்துடன் மூடை ஒன்றிற்குச் சதம் 05 சுமை கூலியாக விதிக்கப்படும். கோரிக்கை ஏற்கப்பட்ட மூன்று வாரங்களில் சிந்திக்கூட்டப்பட்ட அரிசியும் பழுதடைந்த அரிசியும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட அரிசியின் விலை., கோரிக்கை அனுமதிக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

இக்காரியாலயத்தில் ரூபா. 250 தங்குபணமாகக் கொடுப்பதன்பேரில் பெறும் விண்ணப்பப் பத்திரங்களில் கோரிக்கைகள் செய்யப்படவேண்டும். சித்தியடையாத கோரிக்கைகாரருக்குத் தங்குபணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

மேல் விபரங்களுக்குக் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

கே. எம். டீ. ஜயனெத்தி,
கொழும்பு, உணவு அதிகாரி.
1959 ம் ஆண்டு பெப்ருவரி மீ 12 ந் வ.

### சீதுவையில் உள்ள சாராய வடிச்சாலைக்கு 1959 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதியிலிருந்து 1959 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி வரைக்கும் கள்ளு வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள்

1959 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதியிலிருந்து 1959 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிவரை சீதுவையிலுள்ள அரசினர் சாராய வடிச்சாலைக்கு கள்ளு வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் உள்நாட்டு விவகார அமைச்சின் கேள்விப்பத்திர சபைத் தலைவரால், 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ந் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மதுவரி அதிகாரியிடமிருந்து பெறக் கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

றி. பி. வடுகொடபிற்றியா,
கொழும்பு, பதில் மதுவரி அதிகாரி.
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 16 ம் வ.

## கடற்றொழிற் பகுதி

### திருகோணமலை மாவட்டத்தில் படுக்கையில் 101 கடற்றொழிலாளர் வீடுகளையும் 101 மலசலகூடங்களையும் நிர்மாணித்தல்

திருகோணமலை மாவட்டத்தில் படுக்கையில் 101 கடற்றொழிலாளர் வீடுகளையும் 101 மலசலகூடங்களையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப் படல் வேண்டும். கேள்வியாளர்கள், ஒவ்வொன்றும் 20 வீடுகளும் 20 மலசல கூடங்களும் கொண்ட கூறுகளுக்கு மாத்திரம் கேட்பதற்கே அனுமதிக்கப்படுவர். எனினும் இவைகளில் ஒரு கூறு 21 வீடுகளையும் 21 மலசலகூடங்களையும் கொண்டதாயிருக்கும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ம் திகதி பி. ப. பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. கொழும்பு-3 இலுள்ள கடற்றொழில் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ஒவ்வொரு கூறுக்கும் ரூபா 25 வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது இத் தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கடற்றொழிற் பகுதி, டீ. சீ. ஈ. ஏ. டீ. பொன்செக்கா,
கொழும்பு 3. கடற்றொழில் அதிபர்.
1959 ம் ஆண்டு பெப்ருவரி மீ 16 ந் வ.



இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.